பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 10 சனிக்கிழமை (22-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 87

# திருமலையில் புலிகள் திடீர்த் தாக்கு; 23 ஸ்ரீலங்காப் படையினர் மரணம்!

## இருபது நிமிட மோதலின் போது 23 நவீன ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

திருகோணமலை, வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக் காலை எட்டு முப்பது மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய 20 நிமிட நேர அதிரடித் தாக்குதல் ஒன்றில், 23 விமானப் படையினர் கொல்லப்பட்டனர். 23 நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவரும் வீரமரணமடைந்தனர்.

வேப்பங்குளம் விமானப் படை முகாமில் இருந்து முப்பதுக்கும் மேற்பட்ட விமானப் படையினர் வெளியேறி 10 ஆம் கட்டை முகாமுக்கு ரோந்து சென்றவேளையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் விமானப் படையினரைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் தொடுத்த சமயம் படையினருக்கு உதவுவதற்காக வேப்பங்குளத்தில் இருந்தும், பத்தாம் கட்டையில் இருந்தும் மேலதிகமான விமானப்படை அணிகள் புறப்பட்டு வந்தன.

அவர்களை எதிர்த்தும் புலிகள் தாக்குதல் நடத்தி அவர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### இரு வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், பெப். 22

திருகோணமலையில் நேற்றுக் காலை புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு வேங்கைகள் களப்பலியாகினர்.

லெப்டினன்ட் விக்கினேஸ் [அருளப்பன் யூட்ஸ் — ஊர்காவற்றுறை], இரண்டாம் லெப்டினன்ட் சுருணன் [இராசதுரை தெய்வேந்திரன் — மூதூர்] ஆகியோரே அந்த இருவரும் ஆவர். [ஒ-5]

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், பெப். 22

திருகோணமலை, வேப்பங்குளத்தில் நேற்று புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு :-

- ★ ரி 81 ரக எல்.எம்.ஜி. — 01
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி. — 01
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி — 09
- ★ ரி 56 ரகத் துப்பாக்கி — 12
- ★ ரி 81 ரவைக்கூடுகள் — 34
- ★ ரி 56 ரவைக்கூடுகள் — 46
- ★ ரி 81 எல்.எம்.ஜிக்குரிய ரவைக்கூடுகள் — 03
- ★ ஜே. ஆர். ரக கிரனேட்டுக்கள் — 08
- ★ நடுத்தர ரவைகள் — 2ஆயிரம்
- ★ தொடர் ரவைகள் — 250

## குவாக்கர்ஸ் குழுத் தலைவர் மங்களாவுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 22

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ''குவாக்கர்ஸ்'' சமாதானக் குழுவின் தலைவர் திரு. இராமமூர்த்தி கொழும்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவைச் சந்தித்துப் பேசினார்.

''குவாக்கர்ஸ்'' குழுவின் யாழ் விஜயம் பற்றி திரு. இராமமூர்த்தி திரு. முனசிங்காவிடம் தெரிவித்தார்.

யாழ். வந்திருந்தபோது ''குவாக்கர்ஸ்'' சமாதானத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்கள் என்பது தெரிந்ததே.

இலங்கையில் சமாதானமா அல்லது யுத்தமா என்பதைத் தீர்மானிக்கும் கட்டம் வந்துள்ளது என்று லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர் திரு. இராமமூர்த்தி தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ-எ]

### அரச வங்கிகளின் நெருக்கடியால்

## இரும்புச் சந்தை கொழும்பில் சரிவு!

கொழும்பு, பெப். 22

இரண்டு அரச வங்கிகளின், நிதி நிலைமை பற்றி நிதி அமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜேதுங்கா வெளிப்படுத்தியதை அடுத்து இரும்புச் சந்தை அட்டவணையில் ஐந்து புள்ளிகள் வீழ்ச்சி ஏற்பட்டது.

இது குறித்து வியாழன் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பொதுமக்கள் பயமின்றி தமது வழமையான பரிவர்த்தனை நடவடிக்கைகளை இவ் வங்கிகளில் மேற்கொள்ளலாம் — என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் இரு பெரும் அரச வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் கடன் தீர்க்க முடியாத வங்ரோத்து நிலையை அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### காங்கேசனில் இருந்து உணவு:

## செஞ்சிலுவை அதிகாரி மீண்டும் பலாலி செல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 22

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து குடாநாட்டுக்கு வாகன அணி மூலம் உணவுப்பொருள்களை எடுத்து வருவது குறித்துப் பேசுவதற்காக செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதி மீண்டும் அடுத்த வாரம் பலாலி செல்லவுள்ளார்.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் தற்சமயம் கணிசமான அளவு உணவுப் பொருள்கள் கையிருப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'மெரிதல்' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று பூர்த்தியாகின.

இந்தக் கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டிருந்தன. (ஒ-3)

## காங்கிரஸ் அமோக வெற்றி

புதுடில்லி, பெப். 22

பஞ்சாப்பில் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றியீட்டி உள்ளது.

தேர்தல் நடைபெற்ற 13 நாடாளுமன்றத் தொகுதிகளில் 12 தொகுதிகளையும் 117 சட்டசபைத் தொகுதிகளில் 87 தொகுதிகளையும் இந்திரா காங்கிரஸ் கைப்பற்றி உள்ளது.

நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலில் எஞ்சிய ஓர் இடத்தை பகுஜன் சமாஜக் கட்சி கைப்பற்றியது.

பஞ்சாப் மாநில சட்டசபை கட்சிகள் நிலைவரம் வருமாறு;

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | —117 |
| அறிவிக்கப்பட்ட முடிவுகள் | —117 |
| இந்திரா காங்கிரஸ் | — 87 |
| பகுஜன சமாஜகட்சி | — 09 |
| பாரதீய ஜனதா | — 06 |

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தீவுப்பகுதிக்கு நேற்றும் 54 பேர்

யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்தவர்களில் நேற்றும் 54 பேர் 'குமண' கப்பலில் தீவுப் பகுதிக்குப் புறப்பட்டனர்.

நேற்று முன்தினம் 114பேர் இங்கிருந்து தீவுப்பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றனர் என்பது தெரிந்ததே.

(ஒ-165-15-111)

### முச்சந்தி முரளி



இங்க மாகாணசபைத் தேர்தலை நடத்தினதைப் போலத் தான் அங்கையும் உவை தேர்தலை நடத்தியிருப்பினம் என்ன ...

## 749 ஈழ அகதிகள் நேற்று திருமலை புறப்பட்டனர்

சென்னை, பெப். 22

சென்னைத் துறைமுகத்தில் இருந்து நேற்று 749 ஈழத் தமிழ் அகதிகள் திருகோணமலை நோக்கி கப்பல் மூலம் புறப்பட்டனர்.

அகதிகள் பயணஞ் செய்யும் கப்பலுக்குப் பாதுகாப்பாக இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்றும் செல்கின்றது.

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் ஆட்சேப இயக்கம்

கொழும்பு, பெப். 22

எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் மாதாந்த அலவன்ஸ் கோரி நாடாளுமன்றத்தில் ஆட்சேப இயக்கம் நடத்தினர்.

கடந்த புதன்கிழமை இச் சம்பவம் நடைபெற்றது.

இது தொடர்பாக நாடாளுமன்ற முதல்வரும் அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்த அறிக்கையில் ''எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல், சபாநாயகரின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொஸனுக்கு முன்னர் வன்செயல் தீர்ந்து விடும்

### பிரேமாவின் நம்பிக்கை இது

கொழும்பு, பெப். 22

எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி வரும் பொஸன் பூரணையுடன் நாட்டில் வன்செயலுக்கு இறுதி முடிவு கட்டப்பட்டு விடும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

வாரியப்பொலையில் கடந்த வாரம் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

ஜனாதிபதி மேலும் சொன்னதாவ;

2,300 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த பொஸன் போயா தினமன்று தேவநம்பிய திஸ்ஸ மன்னன் வன்செயலைக் கைவிட்டு, அஹிம்சை வழியை அணைத்துக்கொண்டார். இதனை நாம் எதிர்வரும் பொஸன் போயா தினமன்று நினைவுகூரவிருக்கின்றோம்.

நாட்டை இன்று சீரழித்துக் கொண்டிருக்கும் வன்செயல்களுக்கு இந்த ஆண்டு வரும் பொஸன் போயா தினத்திற்கு முன்னர் முடிவு காணப்படும் என்பது எமது கூட்டுப்பிரார்த்தனையாக இருக்கவேண்டும். உண்மையில் எமது நம்பிக்கையும் அதுவேயாகும்— என்றார் ஜனாதிபதி.

[பிரதமரின் பேச்சு 3 ஆம் பக்கத்தில்] [ஒ-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 — 4 — 1932



உதிர்வு: 14 — 2 — 1990

திருமதி

### இந்திரேஸ்வரி மயில்வாகனம்

திதி: 22-2-1992

ஓடி மறைந்ததம்மா உனைப்பிரிந்து ஈராண்டு வாடித் தவிக்கின்றோம் வண்ணமுகம் காணாமல் தேடி நீ வருவாயோ உன் நிழலில் நாம் வாழ!

என்றும் உம் நினைவில் உருகும்;
கணவன், பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேர்த்தி (லாவண்யா),
சகோதரர்கள்.

''திருத்தணிகை'',
284 [98], பலாலி றோட்,
கந்தர்மடம்.

[19783]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 04 — 1914



மறைவு: 05 — 03 — 1991

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட
அகால மரணமடைந்த

### திருமதி கந்தையா இராசம்மா

அவர்களின்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

156, கோவில் வீதி,
நல்லூர்.

[19795]

## ஊர்காவற்றுறை கொத்தணி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 22

ஊர்காவற்றுறைக் கொத்தணி பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களில் இடம் பெயர்ந்துள்ள அனைத்து மாணவர்களுக்கும், 1992 ஆம் ஆண்டுக்கான இலவச பாட நூல்கள், யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன.

(த)

## PURE / APP - MATHS -

திரு. கமலசிங்கம்,
B sc. (Hons) Dip.in.Edu.

**A/L - 92**

திண்மக் கேத்திரகணிதம்
மொத்தல்-கணத்தாக்கம்

**93**

இருபடிச் சமன்பாடு
நிலையியல்

SHAMROCK
கல்வி நிறுவனம்,
யா / சுண்டிக்குளி.

(19807)

## New Science Hall

Kannathidy Road,
JAFFNA.

'93 A/L
Pure/Applied
Maths

திரு. V. குமுக்கேசன்

விசைகளின் சமநிலை
திரிகோண கணிதம்

ஆரம்பம் :
22 - 02 - 92
SAT. 7-00 a.m.

[சி/1534]

## ஒப்புநோக்குநர் தேவை

ஒப்புநோக்குநர் பணியில் போதிய அனுபவமும், திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் நிறைந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும், ஆங்கிலத்தில் கணிசமான அறிவுடையவர்களாகவும் இருப்பது அவசியம். இரு மொழிகளிலும் ஒப்புநோக்குதல் செய்யத் தகுதி பெற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர் பெரிதும் விரும்பப்படுவர்.

ஆண்கள் மட்டும் பூரண சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்,

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் வை. கணேஷமூர்த்தி (கணேசன்)

(புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்)

தோற்றம்: 26 — 01 — 1947
மறைவு: 09 — 01 — 1992


உங்கள் பிரிவால் வாடும் மனைவி, உற்றார், உறவினர்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றார்கள்.

க. விஜயலெட்சுமி,
[மனைவி].

4/1, கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

[19814]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



### அமரர் கந்தையா தேவராசா

(இளைப்பாறிய பாதுகாப்புப் பரிசோதகர்,
வ. பி. போ. ச., காரைநகர்)

அன்னை மடியில்: 1933 — 07 — 03
ஆண்டவன் அடியில்: 1992 — 01 — 24

அன்பு பொழிந்த தாயாய்
அறிவு புகட்டிய தந்தையாய்
தாயை இழந்த எம்மை
தரிசாய் வாழ விடாமல்
படிக்க என்று பள்ளியனுப்பி
பாதி வழியில் சென்றதெங்கே?
காய்ச்சல் வடிவில் வந்தகாலன்
கவர்ந்து சென்றனனோ உங்களுயிரை
அனாதைகள் ஆகி நாம்
அல்லலுறுகின்றோம் இவ் அவனியில்
வருஷங்கள் பல சென்றாலும்
வாடாது உங்கள் நினைவு
சிற்றின்பத்தை நீக்கிய நீங்கள்
பேரின்பத்தில் என்றும் நிலைத்து
அடைக மனச்சாந்தி.

ஈமைக்கிரியையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— பிள்ளைகள்.

வித்தகபுரம்,
கொல்லங்கலட்டி.

[19794]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1992
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1991

இப் பரீட்சைகளுக்கான

## பயிற்சிப் பரீட்சைகள்

ஒவ்வொரு மாதத்தின் இறுதி
ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1-00 மணிக்கு
இந்நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்

**பரீட்சை 23 - 02 - 1992 பி.ப. 1-00 மணி**

1. யாழ்ப்பாணம் — BOND கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்
2. இருபாலை — EXPRESS INSTITUTE - இருபாலை
3. ஆவரங்கால் — குகன் கல்வி நிறுவனம் - ஆவரங்கால்
4. வடமராட்சி — சதா பொண்ஸ் - அல்வாய்
5. தென்மராட்சி — BRILLIANT கல்வி நிறுவனம் - சங்கத்தானை
6. சுன்னாகம் — வினைல்ஸ் - சுன்னாகம்
7. மானிப்பாய் — BITSMANS கல்வி நிறுவனம்- மானிப்பாய்
8. சித்தன்கேணி — பாரதி கல்வி நிறுவனம் - சித்தன்கேணி.

மேலதிக விவரங்களுக்கு:

## BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் சில மாதங்களில் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும்

## பிரதமர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 22

வடக்கு - கிழக்கு யுத்தத்தை இன்னும் சில மாதங்களில் முடிவுக்குக் கொண்டு வருவோம். எதிரிகளைக் கொன்றாவது நாட்டைக் காப்போம். இது தவிர்க்க முடியாதது.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா வலப்பனையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''இன்றைய நிலையில் ஒழுங்கான, கட்டுப்பாடான அரசாங்கம் ஒன்று நாட்டுக்குத் தேவை. ஜனநாயகம் அழிந்தால் நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படும். துப்பாக்கிகளும் ரவைகளுமே அப்போது ஆட்சி செய்யும். சர்வாதிகாரம் ஏற்படும். நாடு அழிந்து விடும் என்றும் பிரதமர் கூறினார். [இ-எ]

## ரஞ்சன் நினைவாக முத்திரை

கொழும்பு, பெப். 22

வெடிகுண்டுச் சம்பவத்தில் மரணமான முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் நினைவாக, அவரது உருவப்படம் அச்சிடப்பட்ட ஒரு ரூபா பெறுமதியான முத்திரை ஒன்று அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெளியிடப்படவிருக்கின்றது.

[இ-எ]

## தொண்டாவின் யோசனையை எதிர்ப்போர் மாற்று யோசனை தரவேண்டும்

### சபையில் துணை அமைச்சர்

இனப் பிரச்சினைக்கு தீர்வாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சர் தொண்டமானின் யோசனையைப் பிழையானது என்று கூறுவோர் சரியான யோசனையைச் சமர்ப்பிக்க் வேண்டும்.

துணை அமைச்சர் திரு. காமினி லொக்குகே நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்களவர், தமிழர் போன்று ஏனைய சிறுபான்மை மக்களும் இந்த நாட்டில் வாழ்கின்றனர். அவர்களின் நலன்களும் பேணப்பட வேண்டும். பலர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண யோசனையைச் சமர்ப்பிக்காது அரசாங்கத்தைக் குறைகூறுவதிலேயே காலத்தைக் கழித்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

(இ-எ)

# நாட்டுக்கு எதிராக நான் எதையும் செய்யவில்லை

## நாடாளுமன்றத்தில் தொண்டா தகவல்

கொழும்பு, பெப். 22

இந்த நாட்டுக்கு எதிராக நான் எதையும் செய்யவில்லை என்று அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கடந்த செவ்வாய் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தோட்ட நிர்வாகங்கள் தனியார் மயமானாலும் தொழிற்சங்க உரிமைகளை பொதுமக்கள் அனுபவிப்பர். தொழிலாளர்களின் குடியிருப்புகள் அதிகாரசபை ஒன்றின் கீழ் பராமரிக்கப்படும்.

புதிய முகாமைத்துவத்தின் கீழ் தேயிலை உற்பத்தி இரட்டிப்பானால் தொழிலாளர் வாழ்வு சிறப்படையும். எனவே தான் நிர்வாகத் தனியார் மயத்தை ஆதரித்தோம் என்றும் அவர் கூறினார்.

[ஒ-10]

## மேலும் 3,100 அகதிகள் வருவர்

இந்தியாவிலிருந்து இம்மாதம் மேலும் மூவாயிரத்து நூறு அகதிகள் ஐந்து கப்பல்களில் இலங்கை வருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

இரண்டு கப்பல்கள் மூலம் திருகோணமலைக்கு ஆயிரத்து 600 அகதிகளும், மூன்று கப்பல்கள் மூலம் மன்னாருக்கு ஆயிரத்து 500 அகதிகளும் வருவார்கள்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் திரு. கிறிஸ்டி சில்வா வாராந்தச் செயலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

## நல்லூர் பிரதேச சுகாதார வாரம்

# பொதுநலப் பணிகளில் தொண்டர்கள் ஈடுபாடு

நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வாரம் கடந்த திங்கட்கிழமை கொக்குவில் சந்தியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாணவர்கள் மற்றும் சமூக நல அமைப்புகளைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட தொண்டர்கள் சிரமதானத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். இவர்கள் அரை மைல் நீளமான வாய்க்காலை துப்புரவு செய்தனர்.

யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி வைக்க, பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் சுகாதார வார வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். இந்து, கொக்குவில் இந்து மாணவர்கள் மற்றும் லியோ, இன்ரறக்ற் சழகங்கள் உட்பட தமது பிரதேசத்திற்குட்பட்ட சகல பொதுப் பணி மன்றங்களின் தொண்டர்கள், பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பிரதேச விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாளை 23 ஆம் திகதி வரை பொதுமக்களின் உதவியுடன் இப்பணி தொடரும் என்றும் அவர் கூறினார்.

(ஒ)

# பிரபா மீது நீதிமன்ற ஆணை; இலங்கை அரசுக்கே வெற்றி

## பண்ருட்டி கூறுகிறார்

சென்னை, பெப். 22

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் மீது இந்திய நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருப்பது, இலங்கை அரசுக்கும் அங்கே இருக்கும் சிங்களவர்களுக்கும் தான் வெற்றி ஆகும். இந்தியாவிற்கு அல்ல.

முன்னாள் மாநில அமைச்சரும் பாட்டாளி மக்கள் கட்சி எம். எல். ஏயுமான பண்ருட்டி இராமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் சென்னை ஆழ்வார்பேட்டையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் மேலும் சொன்னதாவது;

ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரனை குற்றவாளி என்று அறிவித்திருக்கின்றார்கள். அவர் குற்றவாளியா இல்லையா என்பதை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கட்டும். நமக்குக் கவலை இல்லை.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பே விடுதலைப் புலிகள் தான். பிரபாகரனை நாம் குற்றவாளி என்று அறிவித்தோமெனில் அதனால் இலங்கை தமிழனுக்குத் தான் பாதிப்பு ஏற்படும்.

பிரபாகரனைத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்தால் ஓர் இனமே அழிந்து விடும். இவ்வாறு பண்ருட்டி கூறினார். (இ-எ)

# புலிகள் தீர்வு ஒன்றை ஏற்கும் நிலை உருவாக வேண்டுமாம்

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு முன்வைக்கக் கூடியதாக இருக்கும் வரை —

அந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் ஏற்கக் கூடிய நிலை உருவாகும் வரை —

ஆயுதப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளைத் தங்கு தடையின்றித் தொடர்ந்து மேற்கொண்டு வருவார்கள்.

பிரதமரும் நிதி அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா கடந்த வியாழன் இரவு நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை அவர் தெரிவித்தார்.

(இ-எ)

## ஓய்வூதியருக்கு கொடுப்பனவு உயர்வு

கடந்த ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்ட 100 ரூபா ஓய்வூதிய உயர்வு நிலுவைப் பணத்துடன் சேர்த்து எதிர் வரும் மார்ச் மாதம் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும்.

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இந்த ஓய்வூதிய உயர்வு, இதற்கான சுற்று நிருபம் தாமதமாகக் கிடைத்ததால் மார்ச் முதல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## தடை விதிப்பு!

ஐரோப்பிய சமூக நாடுகளில் புகை பிடித்தல் தொடர்பான பிரசார விளம்பரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய தீர்மானமொன்று அண்மையில் ஐரோப்பிய சமூக நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

[ஒ-10]

## வடக்கு - கிழக்குப் பகுதிகளின்

# புனரமைப்புப் பணிக்கு வந்த பணம் சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு - கிழக்கு புனர்நிர்மான நடவடிக்கைகளுக்கென 1990 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நிவாரணத்திட்டத்தின் கீழான கடன்கள் திருகோணமலை, அம்பாறை, வவுனியா பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்படுவதாக தெரியவருகிறது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவை மூலம் மீன்பிடித் தொழில், விவசாயம் போன்ற துறைகளைப் புனரமைக்க ஒவ்வொருவருக்கும் 10 லட்சம் ரூபா கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்கியிருந்தது.

வடக்கு - கிழக்கு மக்கள் அந்தக் கடன்களை அன்று பெறமுடியாது இருந்தது.

அந்த நிதியிலிருந்தே தற்போது திருகோணலை, வவுனியா மாவட்டங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கும், அம்பாறைப் பகுதி மக்களுக்கும் கடன் வழங்கப்படுவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [த-3]

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 22

செல்வி யசோதா செல்வராஜாவின் இசை அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் சிறப்புரை வழங்குவார்.

(இ)


## கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் - தென்மராட்சி

### பதவி வெற்றிடம்

1) கணக்காளர்
2) கணக்கு இலிகிதர் [Accounts Cleark]

இவற்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிறுவனக் கணக்கேடுகள் பேணுதல்: உற்பத்தி - வியாபார, லாப நட்டக் கணக்கு, ஐந்தொகை தயாரிப்பதிலும், அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 05-03-1992 இல் கடமைக்கு சமுகமளிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 27-02-1992க்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு, நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.

— பொது முகாமையாளர்

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்,
தலைமைக் காரியாலயம்,
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

[19809]



## முக்கிய அறிவித்தல்

### போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

எமது தயாரிப்புக்களான ஜெயந்தி, துர்க்கா, றோஸ் பத்திகளின் வெற்றுப் பைக்கற்றுகளை சிலர் சேகரித்து தரம் குறைந்த பத்திகளை அடைத்து விற்பனை செய்து வருவதாக எமக்கு புகார் கிடைத்துள்ளது.

எனவே பத்தி வாங்கும் போது நன்றாகப் பார்த்து வாங்கவும்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

[சி/1616]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

பாவித்த Chinese Made Voltage Stabilizer விற்பனைக்குண்டு. Radio Manuals, 121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1615]

**தேவை**

அனுபவமுள்ள, பாஸ், மேசை வேலையாள், தட்டு வேலையாள் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்கள்நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். பாண்டியன் தாழ்வு பேக்கவுஸ், 65, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். [19800]

**மணமக்கள் தேவை**

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணப்பெண்களும் மாற்றுத் திருமணத்தை விரும்புவோரும், அல்லா தோரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19766]

**மணப்பெண் தேவை**

ஸ்தாபனம் ஒன்றில் பணியாற்றும் 26 வயதுடைய அழகிய மணமகனுக்கு பெண் தேவை. 141, மே/பா உதயன். [5061]

**திருமண சேவை**

ABCDE விவாகப்பொருத்துனர் ஸ்தாபனத்தில், வெளிநாட்டு மணமக்களும், உள்நாட்டு மணமக்களும், செவ்வாய்க் குற்றமுள்ளோரும், குற்றமற்றவர்களும் ல/ராகு கேது உடையோரும் சகல துறையிலும் உள்ளனர். 9 மணியில் இருந்து 2 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம். 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [19796]

**அம்பாள் திருமண சேவை**

Doctors, Engineers, I. C. M. A. B.Sc, B.A. Trained Teachers. A/L Teachers ஆகிய மணப்பெண்களுக்கு மணமக்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் 50/- ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [19801]

**வினாத்தாள் (ஆண்டு 5, 4)**

புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் ஆண்டு-5 23-2-92 ஞாயிறும், ஆண்டு-4 1-3-92 ஞாயிறும் வெளியிடப்படும், பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19808]

**புதிய நாவல்**

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'', திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம், இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது, இதயம் சிலிர்க்கிறது, மானம் உயிர்க்கிறது. [19773]

**சோதிட நூல்**

B. V. Raman எழுதிய The Astrological Magazine, 1992 ஆம் ஆண்டு மலர் கிடைக்கும் இடம்: பூபால சிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1614]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 09 — 09 — 1929



உதிர்வு: 23 — 01 — 1992

## திருமதி பரமேஸ்வரி இராசையா

(இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலரும், யாழ் மாவட்ட சமாதான நீதிபதியுமான திரு. இ. இராசையாவின் பாரியார்)

எங்கள் இல்லத்தின் இணையற்ற தலைவியாய், மனையும் சுற்றமும் பேணிக் காத்து, அன்புடன் எமையெலாம் அரவணைத்து, பெண்குல திருமகளாய், அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் விளங்கி, என்றென்றும் எம் நினைவுகளில் நிலை கொண்டு வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்மாவின் சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர் வளையம் சாத்திய கச்சேரி - கிழக்கு சனசமூக நிலையத்தாருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அன்னாரின் இன்னுயிரைக் காப்பாற்ற பகீரத பிரயத்தனம் செய்த வைத்திய கலாநிதிகளுக்கும், தாதிகளுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கியோருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பேரிழப்பால் துயருறும்:

**கணவன், மக்கள், மருமக்கள், சகோதரன், பேரப்பிள்ளைகள்.**

''இந்திரப் பிரஸ்தம்'',
221. கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [19811]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 05 — 03 — 1949



விண்ணில்: 22 — 02 — 1991

செல்வி

## பிலோமினா அருளானந்தம்

(ராசாத்தி)

ஆண்டொன்றின் முன் எம்முள் அமரராகி,
ஆறாத துயர்தந்த உயிருமாகி,
மீண்டு வரா உலகேகி விட்டவளே,
மீளாத இன்பத்தைத் தொட்டவளே!

அன்பு பிலோமினம்மாவே ராசாத்தி,
அமைதியுற நின் ஆன்மா வேண்டுகிறோம்
உன்னை எண்ணிடுங்கால் உருகி அழுகின்றோம்,
உம் பரனடியில் எமக்காய் மன்றாடு.

உன்னை எண்ணி உருகும்:

**பெற்றோர், உடன் பிறப்புக்கள், சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.**

மி. அருளானந்தம்.
(பெரிய தம்பி)
பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
மயிலிட்டி. [19784]

---

# கணக்கியல்

## A/L-91 பயிற்சிப் பரீட்சை பகுதிII

**03 - 03 - 1992 (செவ்வாய்)**

**12-00 — 3-00** மணி பி. ப.

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பின்வரும் நிறுவனங்களில் உடன் பதிவு செய்யவும்.

| | | |
|---|---|---|
| விக்னா கல்வி நிறுவனம் | ... | யாழ்ப்பாணம் |
| சிவாகி ,, ,, | ... | சாவகச்சேரி |
| யூனிவேர்சல் | ... | கந்தர்மடம் |
| குகன் கல்வி நிலையம் | ... | அச்சுவேலி |
| பீகன் ,, ,, | ... | உடுப்பிட்டி |
| N. C. A. | ... | பருத்தித்துறை |


**S. K. பிரபாகரன்**

[சி-1535]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 08 — 1986



மறைவு: 04 — 03 — 1991

## கமலநாதன் ஹேமலதன்

திதி: 22-2 1992

பேராண்டாய் வாழ்ந்து பிறந்தைந் தாண்டுவரை
சீராண்டாய் வாழ்ந்தாய் சிறப்புடனே - ஓராண்டாய்
கள்ளங்கலவா வுன்கற்கண்டு மொழிநினைவால்
வெள்ளம் பொழியுதே விழி.

செ. கமலநாதன்-
குடும்பத்தினர்.

மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை. (5053)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 21 — 7 — 1954



மறைவு: 24 — 1 — 1992

## திருமதி ஸ்ரீதரன் மகாலக்ஷ்மி (மகா)

இருபத்தொரு வயதினிலே கணவன் முகம் கண்டாயே
ஈரெட்டு வருடங்கள் குழந்தையின்றித் தவித்தாயே
உன்முகம்போல் மகனொருவன் வந்து பிறந்த பின்னே
உன்னை அம்மா என்று அழைத்தபோது அழகாகச் சிரித்தாயே
மகன் அடுத்த மொழி பேசு முன்னே அழகு விழிகள் மூடியதேன்!

24-2-92 திங்கட்கிழமை அன்று பருத்தித்துறை சந்த உடையார் ஒழுங்கையிலுள்ள ஸ்ரீமஹால் இல்லத்தில, திருமதி ஸ்ரீதரன் மகாலக்ஷ்மி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

செ. ஸ்ரீதரன் [கணவன்]
கௌரிசங்கர் [மகன் - கோபி]

சந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை, [சி-1532]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மத்தியஸ்தம் எந்தத் திசை?

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சர்வதேச ரீதியில் உறுதி செய்யப்பட்ட பேச்சுவார்த்தையை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தொடங்க வேண்டும்.

இவ்வாறு லண்டனில் நடைபெற்ற சர்வதேச தமிழர் பேரவையின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினை முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நீடித்து வருவது, அதனை உள்நாட்டுப் பிரச்சினை என்ற வட்டத்திற்குள் வைத்துத் தீர்க்க எடுத்த முயற்சிகள் பல தடவைகளிலும் தோல்வி கண்டு விட்டன.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கும், அவர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் தலைவர்கள் இணங்கவில்லை. சில வேளைகளில் இணங்கிக் கொண்ட பின்னர் அவற்றை வழங்கவில்லை. அதனால் சிங்களத் தலைவர்களைத் தமிழர்கள் நம்புவதற்கில்லை.

தமது தரப்பில் தவறுகளையும், தப்புகளையும் இழைத்துவிட்டு, இப்போது தமிழர்களை — அவர்களின் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளை — நம்பிப் பேச்சுவார்த்தைக்குப் போக முடியாது என்று தென்னிலங்கையில் கூறப்படுகிறது. அரசாங்க அமைச்சர்கள் பலரும் அதே கருத்தையே வெளியிட்டு வருகிறார்கள்.

மொத்தத்தில், இரண்டு தரப்பாரும், மற்றவர் தம்மை ஏமாற்றி விடுவாரோ என்ற சந்தேகக் கண்ணுடனேயே நோக்குகிறார்கள். ஆகையால் பேச்சுவார்த்தையின் போது இணங்கப்படும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கு ஓர் உத்தரவாதம் அவசியம்

அது ஒரு புறமிருக்க —

இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம். அதில் வெளியார் தலையிடவோ, சமரசம் செய்து வைக்கவோ இடமில்லை என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு. அதன் காரணமாகவே அது ஆஸ்திரேலியா, சுவிஸ், கனடா ஆகிய நாடுகள் தெரிவித்த மத்தியஸ்த விருப்பத்தை ஏற்றுக் கொள்ளாமல் மௌனம் சாதிக்கின்றது. அனேகமாக மத்தியஸ்தத்தை நிராகரிக்கும் போக்கே உண்டு.

வெளியார் மத்தியஸ்தம் இல்லாத பேச்சுவார்த்தை அல்லது தீர்வு என்றால் மட்டுமே தான் எண்ணுவதைத் திணிப்பது இலகுவாகிவிடும் என்று கொழும்பு அரசு நினைப்பது இயல்பே. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தம்மீது எந்தத் தீர்வும் திணிக்கப்படுவதை விரும்பவில்லை. நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. பக்கம் சாராமல், நியாயத்தைப் புரிந்துகொண்டு, தமிழர்களின் இன்னல்களைத் தெரிந்து நியாயமான ஒரு தீர்வை வலியுறுத்தக் கூடிய மத்தியஸ்தரே தேவை.

அரசாங்கம் ஒரு முனையிலும், தமிழர்கள் மறுமுனையிலும் நிற்கிறார்கள். ஆகையால் தீர்வுக்கான மத்தியஸ்தம் என்பது தீர்வைப் போலவே வெகு அவதானத்துடனும், கண்காணிப்புடனும் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று

அதற்கு முதலில் சர்வதேச மத்தியஸ்தத்துக்கு அரசாங்கம் இணங்கும் நிலை உருவாகுமா? எப்படி அதனை உருவாக்குவது?

# எட்டு மாத கால நரசிம்மராவ் ஆட்சி எதிர்நோக்கும் இரண்டு கண்டங்கள்

இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் கடந்த சில மாதங்களில் பாரிய மாற்றங்களை நரசிம்மராவ் அரசு ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், காங்கிரஸ் சிறுபான்மை அரசு எதிர்வரும் மாதங்களில் நாடாளுமன்றத்தில் இரு நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அது பற்றிய ஒரு கண்ணோட்டம் இது.

## ஒன்று வரவு - செலவு திட்டம் மற்றது ஜனாதிபதி தெரிவு

'நித்திய கண்ட' நிலையில் கடந்த எட்டு மாதங்களாக புதுடில்லியில் நரசிம்மராவின் ஆட்சி நடந்து வருகின்றது.

இந்திரா காங்கிரஸ் அரசு எதிர்வரும் மாதங்களில் இரண்டு முக்கிய கண்டங்களை வெற்றிகரமாகத் தாண்ட வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்

ஒன்று, எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட (பட்ஜட்) கூட்டத் தொடரில் புதிய பட்ஜட்டை நிறைவேற்ற வேண்டும்.

இரண்டாவது, எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

இந்த இரண்டு கருமங்களில் ஒன்றான பட்ஜட்டை நிறைவேற்ற லோகசபையில் சாதாரண பெரும்பான்மை இல்லாதது, இம்முறை பெரும் சிக்கலை உருவாக்கும் என்று புதுடில்லி வட்டாரங்கள் ஊகித்துள்ளன.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு லோக சபையிலும் மட்டுமல்ல, மாநிலங்களின் சட்டசபைகளிலும் அரசு நிறுத்தும் வேட்பாளருக்கு பெரும்பான்மையான வாக்குகள் கிடைத்தாக வேண்டும்.

### கடந்த ஆண்டில்......

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ராவின் ஆட்சி பதவியேற்ற போது, இன்னொரு தேர்தலை உடனடியாகச் சந்திக்கும் நிலையில் எதிர்க்கட்சிகள் இருக்கவில்லை.

அதன் காரணமாக அறுதிப் பெரும்பான்மை இல்லாத காங்கிரஸ் ஆட்சியை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் அப்போது விரும்பவில்லை.

எனவே, நரசிம்மராவின் சிறுபான்மை அரசுக்கு லோக சபையில் எதிர்க்கட்சிகளான ஜனதா தள் கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியும் மாறி மாறி ஆதரவைக் கொடுத்து அதன் ஆயுளை நீடித்துக் கொண்டு வந்தன.

### ஆயுள் நீடிப்பு

இந்த ஆயுள் நீடிப்பு ஆதரவை, நரசிம்மராவின் அரசாங்கத்தின் ஆயுள்காலம் வரை வழங்குவதற்குத் தயாராக இல்லை என்பதைத் தெரிவிக்குமாற்போன்று, முக்கிய எதிர்க்கட்சிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

**இந்திய அரசியல்**

அரசின் தாராளமயப் பொருளாதாரக் கொள்கை மற்றும் அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கை ஆகியன காரணமாக ஆத்திரமுற்றுள்ள இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இடைக்காலப் பொதுத் தேர்தல் ஒன்றை சந்திக்கவும் தயாராக இருப்பதாகவும் அக்கட்சி அறிவித்திருக்கின்றது.

இது போன்று - காஷ்மீர் பிரிவினைப் போராளிகளின் சவாலைச் சமாளிப்பதில் நரசிம்மராவ் அரசு வெற்றி காணத்தவறில், அந்த அரசை இந்து சமுத்திரத்தில் தூக்கி எறியவும் தயங்கப்போவதில்லை என்று பாரதீய ஜனதாக்கட்சி எச்சரித்துள்ளது.

இந்த இரண்டு சவால்களையும் ராவ் அரசு எப்படி சமாளிக்கப் போகின்றது?

### லோக சபையில் காங்கிரஸ் பலம்

லோகசபையில் 534 எம். பிக்கள் தற்போது உள்ளனர்.

லோகசபையில் இந்திரா காங்கிரஸுக்கு 244 எம்.பிக்கள் உள்ளனர். காங்கிரஸின் நேசக்கட்சிகளில் [அ.தி.மு.க - 11, முஸ்லிம் லீக் - 2, கேரளா காங்கிரஸ் - 1, சிக்கிம் சங்கராம் பரிஷத் - 1, ஜனதாதள் (குஜராத்) - 1, நியமன எம். பிக்கள் - 2] சார்பில் 18 எம். பிக்கள் உள்ளனர்.

காங்கிரஸும் அதன் நேசக் கட்சிகளும் இணைந்த நிலையிலும் இந்த ஆட்சிக்கு லோக சபையில் சாதாரண பெரும்பான்மை பெற இன்னும் 6 எம். பிக்கள் தேவைப்படுகின்றனர்.

லோக சபையில் காங்கிரஸுக்கு தனித்து ஆட்சி நடத்தத் தேவையான சாதாரண பெரும்பான்மையைப் பெற 24 எம். பிக்கள் தேவைப்படுகின்றனர்.

இந்த நிலையில் காங்கிரஸும் அதன் நேசக்கட்சிகளும் சேர்ந்து, சாதாரணப் பெரும்பான்மைக்குத் தேவையான 6 எம். பிக்களின் ஆதரவை எப்படிப் பெறப்போகின்றன?

### ஜனதா தள் பிளவு

திரு. வி. பி. சிங் தலைமையிலான ஜனதாள் கட்சியின் சார்பில் லோகசபையில் 55 எம். பிக்கள் இருந்தனர். அஜித் சிங்கின் தலைமையிலான பிரிவு வெளியேறியதைத் தொடர்ந்து, ஜனதா தள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆகக் குறைந்திருக்கிறது.

ஜனதா தள் கட்சியில் ஏற்பட்ட பிளவுக்கு இந்திரா காங்கிரஸே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேறும் எம். பிக்களின் துணையுடன் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை பெறும் முயற்சியில் இந்திரா காங்கிரஸ் ஈடுபட்டிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஜனாதிபதி தேர்தல்

இதேவேளை— புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

இராமசாமி வெங்கட ராமனின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

தென் இந்தியர் ஒருவர் பிரதமராக இருப்பதால் ஜனாதிபதி பதவிக்கு வட இந்தியர் ஒருவரையே காங்கிரஸ் கட்சி நிறுத்தும் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஷயமாக உள்ளது.

தற்போது உப ஜனாதிபதியாகவுள்ள டாக்டர் சங்கர் தயாள் சர்மாவையே பெரும்பாலும் அப்பதவிக்கு காங்கிரஸ் நிறுத்தக் கூடும்.

எதிர்க்கட்சிகளின் மதிப்பைப் பெற்றுள்ள அவரை நிறுத்துவதன் மூலம் தனது வேட்பாளர் போட்டியில்லாமல் வெற்றியீட்டும் நிலை உருவாகலாம் என்பது காங்கிரஸின் எண்ணமாக இருக்கலாம்.

ஆனால் மாநில சட்டசபைகளில் எதிர்க்கட்சிகளின் பலம் அதிகரித்துள்ளதால், காங்கிரஸுக்கு போட்டியாக ஒரு வேட்பாளர் நிறுத்தப்படும் பட்சத்தில், காங்கிரஸ் வேட்பாளர் வெற்றியீட்டுவது கஷ்டமான காரியமாகவே இருக்கலாம் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

எனினும் —

பிரதமர் நரசிம்மராவ் கடைப்பிடித்து வரும் 'கருத்துடன் பாட்டுக் கொள்கை', இரண்டு கண்டங்களையும் தாண்ட உதவும் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் நம்புகின்றன.

★

- தீபன்ராஜா -

## புலவர்மணியின் 'பாலைக்கலி' நூல் வெளியிடப்பட்டது

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு ஒன்று மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

சங்க கால இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையை 1956, 1957 களில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் வார இதழ் ஒன்றில் கட்டுரை வடிவாக, தொடராக எழுதியிருந்தார். அக் கட்டுரைகளே 'பாலைக்கலி' என்ற பெயரில் பிரசுரமாகியுள்ளது. பாலைக்கலியில் உள்ள 36 பாடல்களில் முதல் 16 பாடல்களுக்கான கட்டுரைகளே இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தா நூலுக்கு ஆசியுரை வழங்கி இருக்கிறார்.

புலவர்மணியின் மாணாக்கர்களில் ஒருவரான வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா இந்த நூலுக்கு வழங்கிய அணிந்துரையில்-

''கலித்தொகையினை மக்கள் காப்பியமாக வசன நடையில் எழுதினால் தான் மக்கள் அறிந்துகொள்ள இலகுவாக இருக்கும் என்று நினைத்து புலவர்மணி கொழும்பு தமிழ் தினசரி ஒன்றுக்கு கட்டுரைகளாக எழுதினார்'' - என்று கூறியிருக்கிறார். [அ-எ]

## இலக்ஷார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப். 22

நாட்டின் சுபீட்சத்திற்காகவும், மக்களின் அல்லல் நீங்கவும் வேண்டி, வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் பத்து நாட்கள் இலக்ஷார்ச்சனை நடைபெற உள்ளது.

ஒவ்வொரு நாளும் காலை 9-00 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் மாலை 4 மணிக்கு இலக்ஷார்ச்சனையும் நடைபெறும்.

இத்தினங்களில் மாலை 5-30க்கு இராமாயண கதா காலட்சேபம், சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ-ஏ]

## 5 ஆவது உலக கிண்ண கிரிக்கெட்

மெல்போர்ண், பெப். 22

ஐந்தாவது உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டன், சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் விவகாரத்தில் ஜெயலலிதா தோற்பார்!

### பிரபல சோதிடர் கணிப்பு

சென்னை, பெப். 22

விடுதலைப் புலிகள் பிரச்சினையை முதலமைச்சர் ஜெயலலிதாவினால் ஓரளவு தான் சமாளிக்க முடியும். ஆனால் இறுதியில் அவர்களிடம் ஜெயலலிதா தோற்று விடுவார்.

இந்தியாவின் பிரபல சோதிடர்களில் ஒருவரான சுசில் சதுர்வேதி முன்கண்டவாறு கூறியிருக்கிறார்.

ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும் என்பது பற்றி சுசில் சதுர்வேதி தமது ஆருடத்தில் மேலும் கூறியிருப்பதாவது;

24-02-1948 காலை 11.03 [இந்திய நேரப்படி]க்கு ஜெயலலிதா பிறந்தார். மேட லக்கினம். கடக ராசியாகும்.

ஜெயலலிதாவுக்கு பல எதிரிகள் உருவாகி, அவரது வீழ்ச்சிக்கு அது வழி ஏற்படுத்திவிடும். அ. தி. மு. க. வில் இருந்து பலர் விலகிவிடுவர்.

1992 பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் 1993 டிசம்பர் வரை அவர் அரசியலில் பல சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். பலமான அரசியல் எதிரிகளை ஜெயலலிதாவினால் திறமையாகச் சமாளிக்க முடியாது. 1993 மார்ச் முதல் 1996 மார்ச் வரை தீவிரவாதிகள் மற்றும் அவரது அரசியல் எதிரிகளின் தாக்குதலுக்கு ஜெயலலிதா இலக்காகி வருவார்.

இப்படி சுசில் சதுர்வேதி கூறியிருக்கின்றார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார வார விழா நாளை

யாழ்ப்பாணம், பெப், 22

நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வாரத்தின் இறுதித் தினமான நாளை ஞாயிற்றுக் கிழமை சுகாதார விழா ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நல்லூர் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பிரமுகர்கள் பலர் இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

சனசமூக நிலையங்களும், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவுள்ளன.

[ஓ-5]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கதிர்காமு லீலாவதி

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கதிர்காமு லீலாவதி 20-2-92 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கதிர்காமு [ஓய்வுபெற்ற கிளாக்கர்] அவர்களின் அன்பு மனைவியும், வரதராஜா [கடல் கடந்த தொலைபேசி திணைக்களம், கொழும்பு], திருமதி மங்களேஸ்வரி [டென்மார்க்], கனகராஜா [கிராம சேவையாளர், குமரபுரம்], திருமதி புவனேஸ்வரி [கனடா], திருமதி மகேஸ்வரி [கனடா], சிறிஸ்கந்தராஜா [கனடா], வைகுந்தராஜா [டென்மார்க்], பேரின்பராஜா [டென்மார்க்], மனோரஞ்சிதம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சிவக்கொழுந்து [டென்மார்க்], திரு. திருநாதன் [கனடா], திரு. ரவீந்திரன் [கனடா], திருமதி மகேந்திரகுமாரி [கொழும்பு], திருமதி தமிழ்மலர் [ஆசிரியை, தர்மபுரம் ம. வி.] ஆகியோரின் அன்பு மாமியாரும், உமைதர்ஷன், கதிர்நேசன் [டென்மார்க்], சர்மிளா [கனடா] ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி [சுப்பர்மடம்] மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வரதராஜா, கனகராஜா
[பிள்ளைகள்]

'சுப்பிரமணிய வாசம்',
புலோலி மேற்கு,
புலோலி.

[5060]

## திருமதி முத்தையா சிவபாக்கியம்

மண்கும்பான் மேற்கில் முன்பு வசித்தவரும், தற்போது கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி முத்தையா சிவபாக்கியம் நேற்றுக் [21-02-92] காலமானார்.

அன்னார் மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு முத்தையாவின் அன்பு மனைவியும் காலம் சென்ற செல்லத்தம்பி லட்சுமி தம்பதிகளின் அருமை மகளும், காலம் சென்ற மகாலட்சுமி, மாணிக்கவாசகர் [முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முகாமையாளர், தற்போது Scientist, N. B. R. O, கொழும்பு), சிவலிங்கம், கெங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்தியநாதன், தவமணி [திட்ட அமுலாக்க உத்தியோகத்தர், கச்சேரி - கிளிநொச்சி], சதாலட்சுமி, பாலச்சந்திரன் [வைத்தியசாலை வேலணை] ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2. 00 மணியளவில் கல்வயலில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. பாலச்சந்திரன்
[மருமகன்]

கல்வயல்,
சாவகச்சேரி.

[19817]

## அம்பலவாணர் துரையப்பா (ஐயம்பிள்ளை)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் - துரையப்பா [ஐயம்பிள்ளை] காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற அம்பலவாணர் - தில்லைவனம் தம்பதிகளின் மூத்த மகனும், தெய்வநாயகியின் [குணம்] அன்புக் கணவரும், புஸ்பராணி [ஜேர்மனி], காலஞ்சென்ற சந்திரபாலன், ஜெயகுமார் [சுவிஸ்], புஸ்பலதா [சுவிஸ்], விஜிதா [சுவிஸ்], ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். தர்மராசா [ஜேர்மனி], ஞானகுமார் [சுவிஸ்], மாது [சுவிஸ்], ரஞ்சினி, விவேகானந்தன் ஆகியோரின் மாமனாரும், அம்பலவாணர் நாகரத்தினம், அப்பாக்குட்டி அன்னு, காலஞ்சென்ற இராசையா இராசு, சோமசுந்தரம் [ஜேர்மன்], கனகசபை பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், திருநாவுக்கரசு [ஜேர்மன்], தையல்நாயகி, ஜெயரெத்தினம் ரங்கநாயகி [அரசினர் வைத்தியசாலை, புங்குடுதீவு] ஆகியோரின் மைத்துனரும். சாளினி, பிரபாகினி, பிரதீபன், ரமீசன், உசா, தர்சினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 2 மணிக்கு தகனக் கிரியைக்காக ஊரெழு பொக்கணை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெய்வநாயகி (குணம்)
[மனைவி]

ஊரெழு பிள்ளையார் கோவிலடி
ஊரெழு.

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

வட்டு இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை, யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் திரு. க. இரவீந்திரன் ஆகியோருக்கான நினைவுக் கூட்டம் இன்று சனி பிற்பகல் 3 மணிக்கு வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்ப பிரிவு மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டு. கல்வி, சமூக அபிவிருத்திக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

[இ]

## தொலைக்கல்வி ஆசிரியருக்கான செயல்முறை அமர்வு

யாழ்ப்பாணம், பெப். 22

தொலைக் கல்விப் பயிற்சி நெறியில் பங்குகொள்ளும் ஆசிரியர்களுக்கான செயல் முறை அமர்வு இன்றும் நாளையும் [சனி - ஞாயிறு] நடைபெறும் என்றும்—

முதலாம் ஆண்டு, இறுதி ஆண்டு பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களில் மேற்படி ஆசிரிய மாணவர்கள் கையொப்பமிட வேண்டியிருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளுமாறும்—

தொலைக் கல்விப் பயிற்சி நெறிக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எஸ். அலெக்ஸாண்டர் அறிவித்துள்ளார்.

[இ-5]

## சாரண ஸ்தாபகர் தினம்

யாழ்ப்பாணம், பெப். 22

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் சாரண ஸ்தாபகர் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

[இ]

## நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். 'ரெஸெப்' (TACEP) கற்கை நெறியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா கலந்து கொள்கிறார். [ஓ]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 22

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேற் கல்வி டிப்புளோமா கற்கை நெறியினை, யாழ். பிராந்திய நிலையத்தில் மேற்கொள்ளும் சகல மாணவர்களுக்குமான அவசர கூட்டம் ஒன்று நாளை காலை 9 மணிக்கு திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஓ-5]

## 5ஆவது உலக..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகிய நாடுகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

ஆட்டங்கள் ஆஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் நடைபெறவுள்ளன.

### இன்றைய போட்டிகள்

1. இந்தியா எதிர் இங்கிலாந்து இடம்: ஆஸ்திரேலியா - பேர்த்.
2. நியூசிலாந்து எதிர் ஆஸ்திரேலியா இடம்: நியூசிலாந்து - ஆக்லாந்து.

[இ-எ]

## காங்கிரஸ்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| அகாலிதள் [காபூல்] பிரிவு | — 03 |
| இந்திய கம்யூ. | — 04 |
| மார்க்சிஸ்ட் கம்யூ. | — 01 |
| ஜனதா தள் | — 01 |
| சுயேச்சை | — 06 |

[இ-எ]

## நரசிம்மராவ் அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணை

புதுடில்லி, பெப். 22

நரசிம்மராவ் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் பிரதமரான திரு. வி. பி. சிங் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதார, அரசியல் இறைமையை மத்திய அரசு சரணடையச் செய்துள்ளது.

ஜனதா தளமும் தேசிய முன்னணியில் உள்ள கட்சிகளும் விரைவில் பொருளாதாரகொள்கைக்கு எதிரான போராட்டத் திட்டங்களை வகுக்க உள்ளன.

நாங்கள் எதிர்க்கட்சி. இந்த அரசுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பொருளாதாரக் கொள்கை விஷயத்தில் இந்த அரசுடன் எந்த விதத்திலும் சமரசம் செய்து கொள்ளமாட்டோம்.

— இப்படி அவர் கூறினார்.

[இ-எ]

## உறவினரின் 'பார்சல்'கள் இன்று கப்பலில் வருகின்றன

கொழும்பில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்களுக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் அனுப்பிய 'பார்சல்'கள் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கின்றன.

காங்கேசன்துறையில் தற்சமயம் உணவுப் பொருள்கள் இறக்கிக்கொண்டிருக்கும் 'மெரிதல்' கப்பலிலேயே 150 மெற்றிக்தொன் நிறையுடைய இந்தப் 'பார்சல்'கள் உள்ளன. 'மெரிதல்' இன்று பருத்தித்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது [ஓ-3-165]

## நான்கு நாட்களில் 50 தமிழர் வவுனியாவில் கடத்தல்

யாழ்ப்பாணம், பெப்: 22

கடந்த நான்கு நாட்களில் மட்டும் வவுனியா நகரப் பகுதியில் 50 பேர் சமூகவிரோதக் கும்பல்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நகரப் பகுதிக்குச் செல்லும் தமிழர்களும், அங்குள்ள கடைகளில் தொழில் செய்யும் தமிழ் இளைஞர்களுமே கடத்திச் செல்லப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## குளத்தில் சிக்கி குடும்பஸ்தர் பலி

தென்மராட்சி, பெப். 22

குளத்தில் தாமரை இலை பிடுங்கச் சென்றவர் தாமரைக் கொடியில் சிக்கி மரணமான சம்பவம் அண்மையில் இயக்கச்சி சங்கத்தார் வயலில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னர் சீராளன் (வயது 42) என்னும் 6 பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

[ஓ-117]

## திருமலையில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களைப் பின்வாங்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மோதல் நடந்த சமயம் படையினருக்கு உதவியாக இரு பொம்மர்களும், இரு ஹெலிகளும் வானத் தாக்குதலை நடத்தின என்று அறிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவம் நடந்த இடத்திலேயே 23 படையினரும் கொல்லப்பட்டனர் என்றும், ஏனையோர் கடும் காயங்களுடன் தப்பிச் சென்றனர் என்றும் தெரியவந்தது.

இதேவேளை வேப்பங்குளம் தாக்குதல் குறித்து பாதுகாப்பு அமைச்சு பின்வரும் தகவல்களை வெளியிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன;

வேப்பங்குளம் பகுதியில் பத்தாம் கட்டையில் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் கண்ணி மற்றும் துப்பாக்கித் தாக்குதலில் 13 விமானப்படையினரும், 6 தேசிய காவலர் படையினரும் கொல்லப்பட்டனர். ரோந்து சென்றுகொண்டிருந்த ஆயுதப் படையினரே அத்தாக்குதலுக்கு ஆளானார்கள்.

படையினர் ஹெலிக்கொப்டர்கள் உதவியுடன் பதில் தாக்குதல் நடத்தினர்.

(ஓ-எ-5-3)

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி

சிறிலங்கா அரசு மாணவர்கள் மீது காட்டும் அநீதிகளைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

## கைப்பை யாருடையது?

யாழ்ப்பாணம், பெப். 22

கணிசமான கொகை பணத்துடனும், கடவுச்சீட்டு [பாஸ்போர்ட்] ஆகிய முக்கிய ஆவணங்களுடனும் மானிப்பாய் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை ஒன்று உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவிகள் இருவரே இந்தப் பெறுமதியுள்ள ஆவணங்களையும், பணத்தையும் கையளித்தனர்.

கைப்பையின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[அ]

## மீனவர்களை நோக்கி வேட்டு

பூநகரி—கல்முனைப் பகுதியில் முகாமிட்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலையும் பின்னர் காலை 6.30 மணியளவிலும் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

குடாக்கடல் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கியே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

[ஓ-51-30-15]

## எதிர்க்கட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்துக்கு சவால் விடுக்கும் நடவடிக்கை'' என்று தெரிவித்துள்ளார்.

சபாநாயகரையும், நாடாளுமன்ற செயலகத்தையும் நிர்ப்பந்திக்கும் நோக்குடன் பயமுறுத்தும் பாணியில் இந்த நடவடிக்கையை நாடாளுமன்ற எதிர்கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

[இ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org